★
Registered as a Newspaper in Ceylon விலை சதம்10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (27-8-65) இதழ் 196

விசுவாவசு ஆவணி 11 ரபி: ஆகிர் பிறை 29 வெள்ளிக்கிழமை




## செல்வச்சந்நிதி வருடாந்த உற்சவம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

தொண்டமனாறு செல்வச் சந்நிதி வருடாந்த உற்சவம் நேற்றையதினம் இரவு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. இரண்டுவார காலத்துக்கு இங்கு திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெறும். பல இடங்களிலுமிருந்து வரும் பக்தர்களுக்கு பிரயாணத்துக்காக இ. போ. சபை விசேஷ பஸ்சேவைக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

# இந்தியா ரூபா 2 கோடி கடன் வழங்கும்

## அத்தியாவசியப் பொருட்களாக கிடைக்கும்

பம்பலப்பிட்டி, வியாழன்

200 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய பொருட்களை இலங்கைக்கு கடனாக வழங்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான உடன்படிக்கை மிக விரைவில் இரு அரசாங்கங்களுக்குமிடையில் கைச்சாத்திடப்படும். திருப்பிச் செலுத்தக்கூடிய கடன் வகையிலேயே இந்த உதவி இந்தியாவிடமிருந்து கிடைக்கவிருக்கிறது.

இந்தியாவில் கிடைக்கக்கூடிய உணவு, உடை வகைகளில் பல்வேறு பொருட்களை கடனாக வழங்க இந்த ஒப்பந்தம் வகைசெய்யும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1962ம் ஆண்டில் 500லட்சம் ரூபாவை இந்தியா வழங்க ஒப்புக்கொண்டு, ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பினும் இன்னும் முழுத் தொகையையும் இலங்கை பயன்படுத்தவில்லை. இருந்தும் புதிய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியா மேலும் கடன் வசதி அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது.

முன்னைய ஒப்பந்தத்தின் பிரகாரம் பயன்படுத்தப்படாத தொகையையும், இப்பொழுது வழங்கப்பட்டுள்ள தொகையையும், மிக விரைவில் தேசிய அரசாங்கம் தக்கமுறையில் பயன்படுத்தும் என அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மறைந்த 'டிக்கெட்' மீண்டும் வந்தது

யாழ்ப்பாணம், வியா.

நாவற்குழி கொலைவழக்கில் காலஞ்சென்ற பொன்னையா, யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் இருந்தபோது, அவரது 'படுக்கை டிக்கெட்டில்' சத்திரவைத்திய நிபுணர் பார்வையிட வேண்டும் என்று எழுதியதாக, சாட்சியமளித்தபோது டாக்டர் பரமதாசன் கூறினார். அதன்பின் சாட்சியமளித்த டாக்டர் சேவியர், படுக்கை டிக்கெட் கொப்பி ஒன்றை கொண்டுவந்திருப்பதாகவும், ஆஸ்பத்திரி படுக்கை டிக்கெட்டிலிருந்து பார்த்து எழுதியதாகவும் குறிப்பிட்டார்.

படுக்கை டிக்கெட்டின் மூலப் பிரதியை சமர்ப்பிக்குமாறு நீதியரசர் உத்தரவிட்டார். நேற்று காலை விசாரணை முடிவடையும் சமயம், வைத்தியஅதிகாரி படுக்கை டிக்கட்டுகளை சேர்த்துவைப்பது வழக்கமென்றும், தான் தேடிப் பார்த்தபோது அந்த டிக்கட் காணவில்லையென்றும் நீதியரசருக்கு தெரிவித்தார். இது முக்கிய விஷயமென்றும் இதுபற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதியரசர் உத்தரவிட்டார்.

பிற்பகல் மீண்டும் நீதிமன்றம் கூடியபொழுது, காலையில் காணவில்லையென்று கூறிய அதே படுக்கை டிக்கெட்டின் மூலப்பிரதியை வைத்திய அதிகாரி கோர்ட்டில் சமர்ப்பித்தார்.

## 'என்கெபெலைரிஸ்' நோயை தடுக்க நடவடிக்கை மேற்கொள்க'

### சுகாதார அதிகாரிக்கு கோரிக்கை

கோண்டாவில், வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்பொழுது புதிதாகப் பரவிவரும் ''என்கெபெலைரிஸ்'' என்ற நோயைத் தடுப்பதில் தீவிர நடவடிக்கை எடுக்குமாறு வலிகாமம் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாசச் செயலாளர் திரு. சி. சண்முகலிங்கம் யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதார அதிகாரியை அவசரக் கடிதமூலம் கோரியுள்ளார். அவர் பத்திரிகைச் செய்திகளைச் சுட்டிக் காட்டி எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டதாவது 'கிராமப் புறமக்கள் 'என்கெபெலைரிஸ்' என்னும் புது நோய் சம்பந்தமான எவ்வித அறிகுறிகளையும் அறிந்திலர். அவர்கள் சாதாரண நோய் எனக் கருதி சாதாரண வைத்தியத்துடன் இருந்து விடுகிறார்கள். எனவே இந்நோய் சம்பந்தமான விபரங்களை அனுப்பிவைக்கும்படியும், அனுப்பி வைத்தால் தாம் சங்கங்களுக்கு விநியோகிப்பதாகவும் இந்த நோய்பற்றி தமது சங்கம் மூலம் மக்களுக்கு எடுத்துக் கூறி இக்கொடிய ஆபத்தினின்றும் குழந்தைகளை விடுவிப்பதற்கு தாம் முயற்சிப்பதாகவும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இக்கடிதத்தின் பிரதிகள் வலிகாமம் வடக்கு காரியாதிகாரிகளுக்கும் சுகாதாரவைத்திய அதிகாரிக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## 'திருமுறைகள் தெய்வீகமானவை'

-பண்டிதமணி

திருநெல்வேலி, வியா.

''திருமுறைகள் நமது அரும் சொத்துக்கள் திருமுறைகளைப் பண்ணுக்கிசையப் பயிற்சி செய்ய வேண்டும். நமது நாட்டில் பண்ணுக்கிசையப் பாடும் முறை கருகி வருகிறது. இருந்தாலும் சிதம்பரத்தில் திருமுறைகளை ஏற்ற பண்களுடன் பயிற்சி செய்த முன்னாள் நீர்ப்பாசன பகுதி மேலதிகாரி கொக்குவில் முத்துவேல் குமாரசிங்கம் திருமுறை இசைக்குச் செய்து வரும் தொண்டு மிகவும மேலானது. சென்ற வருடம் விஜயதசமியன்று திரு, குமாரசிங்கம் ஆரம்பித்த திருமுறைப் பண்பயிற்சி வகுப்பில் சேர்ந்த சங்கீத பூஷணங்களாக உள்ள மாணவர்கள் பெரிதும் பயன் பெற்றிருக்கிறார்கள்''

இவ்வாறு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள தமது இல்லத்தில் சென்ற வருடம் ஆரம்பமான திருமுறைப் பண்பயிற்சி வகுப்பின் ஓராண்டு நிறைவையொட்டிப் பத்திரிகைகளுக்கு விடுத்த விசேஷ செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சென்ற ஒருவருட காலத்தில் திருமுறைப் பண்பயிற்சி வகுப்பில் சேர்ந்தவர்கள் எவ்வாறு பயன் பெற்றார்களோ அதுபோல இளம் பிள்ளைகளும் பயன்பெற எதிர்வரும்விஜயதசமித்தினதன்று (4-10-65) மற்றொரு பண்பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படுமென்றும் அவ்வகுப்பில் சேர்ந்தவர்கள் வட இலங்கை சங்கீதசபை நடாத்தும் பரீட்சையில் இரண்டாம் பிரிவிலோ அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளிலோ சித்தி யெய்தியவர்களாக இருத்தல் வேண்டுமென்றும், இளம் பிள்ளைகளுக்கான இலவச பண்பயிற்சி வகுப்பு சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறுமென்றும் பண்டிதமணி அறிக்கை மேலும் கூறுகின்றது.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நாளையும் மறுநாளும் தினமும் காலை 9-30 மணியிலிருந்து உயர் கணிதத்தை பயில்தலும் கற்பித்தலும் எனும் பொருள் பற்றிய கருத்தரங்கம் நடைபெறும், இக்கருத்தரங்கத்தில் இலங்கை சர்வகலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர்கள் திரு. பி. கனகசபாபதி, டாக்டர் கே. தர்மரத்தினம், திரு. வலன்டைன் ஜோசப் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இக்கருத்தரங்கத்தை இலங்கை தேசிய மாணவர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை ஏற்பாடு செய்துள்ளது.

## இந்திய அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வியடைந்தது

புதுடில்லி, ஆக. 26

அரசாங்கத்தின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று லோகசபையில் 388-66 வாக்குகளால் தோல்வியடைந்தது.

பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது பேசுகையில், பாகிஸ்தான் எங்களை தாக்க ஆரம்பித்திருக்கும் இந்த நேரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது அருவருக்கத்தக்கதாகும் எனத் தெரிவித்தார்.

மக்கள் எல்லோரும் இந்த நேரத்தில் வேற்றுமையை மறந்து ஒன்றுபட்டு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாகிஸ்தான் வசமிருந்த காஷ்மீர் எல்லைக்குள் இந்திய துருப்புகள் சென்று காவல்நிலையங்களை அமைத்திருப்பது குறித்து அவர் குறிப்பிடுகையில் ''இதனால் நாம் ஏதோ சாதித்துவிட்டதாக அக்கறையில்லாதிருக்க முடியாது. இனிமேல் தொடர்ந்தும் கஷ்டம் ஏற்படப் போவதால் மக்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' எனத் தெரிவித்தார்.

## தமிழ் அரசாங்க சேவையாளர் காங்கிரஸ் அங்குரார்ப்பணம்

பம்பலப்பிட்டி, வியாழன்

மாவட்டசபைகள் அமைக்கும் தீர்மானம் பற்றி தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இதனால் தமிழ் வாலிபர்கள் உத்தியோகம் பெறும் சந்தர்ப்பங்களை இழந்துவிடுவார்கள்.

தமிழ் அரசாங்க சேவையாளர் காங்கிரஸின் அங்குரார்ப்பண கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போதுகூறினார்.

தேயிலை பிரசார சபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் கூறியதாவது: புதிய அரசாங்க ஊழியர்களையும், எதிர்நோக்கியுள்ள தடைகளை நீக்குவதற்கு அரசாங்கத்தை வற்புறுத்துவேன்.

புதிய சங்கத்தின் தலைவரான திரு. ரி. மாணிக்கவாசகர் பேசும்போது, இச்சங்கத்தின் நோக்கம், இந்நாடு முழுவதுமுள்ள தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் உரிமையை பாதுகாப்பதென்றும், தமிழ் பேசும் ஊழியர்கள் மத்தியில் சமூக, கலாசாரங்களை முன்னேற்றுவதே என்றும் கூறினார்.

உத்தியோகத்தர்கள் தெரிவு: தலைவர் திரு. ரி. மாணிக்கவாசகர். உபதலை[illegible]வர்கள் திருவாளர்கள் ஜி. ஏ. தவத்துரை, எஸ். வேலாயுதம், கே. குமாரதாஸ். காரியதரிசி திரு. எஸ். ஆர். பரமசிவம். உப காரியதரிசிகள் திருவாளர்கள் ஏ. சிவதாசன், என். சிவகுமார், தனாதிகாரி திரு. எஸ். பாலசந்திரன். 25 பேர் கொண்ட கமிட்டி ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 6-00 மணி முதல் 7-00 மணி வரை திருப்பூங்குடி திரு வீ. கே. ஆறுமுகம் ''ஆனாய நாயனார்'' என்னும் பொருள் பற்றிச் சங்கீத கதாப்பிரசங்கஞ் செய்வார். மாலை 7 மணியளவில் சுக்கிரவார அம்மன் உற்சவம் நிறைவேறும்.

## பிரசுராலயத்தின் ராட்சத சாதனை

லண்டன் ஆக, 26

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள ''டயெட்ஸ்'' பிரசுராலயம் கடந்த 20 ஆண்டுகளில் 4,100 நூல்களில் மொத்தம் 16 கோடி 80 லட்சம் பிரதிகளை வெளியிட்டுள்ளது. இப்பொழுது இப்பிரசுராலயம் 20-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது.

கார்ல் மார்க்சும், ஏங்கல்சும் கூட்டாக எழுதிய ''கொம்யூனிஸ்ட் அறிக்கை'' மட்டும் 24 பதிப்புகள்— 17,400,00 பிரதிகள் இப்பிரசுராலயத்தால் வெளியிடப்பட்டுள்ளன. 48 நாடுகளுடன் இப்பிரசுராலயத்துக்கு வர்த்தகத் தொடர்பு உண்டு.

அடுத்து ''ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு'' என்னும் 8 பாகங்களைக்கொண்ட ஒரு பெரிய புத்தகத்தை இப்பிரசுராலயம் வெளியிடவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பயம், சோகம், காமம், அழுகை ஆகிய இந்த நான்கையும் மரணத்துக்கு முக்கிய காரணமாகச் சொல்லலாம். காமம், குரோதம், லோபம், மோகம் மதம், மாற்சர்யம் என்பனவற்றை ஆறு பகையாகச சொல்லுவது உண்டு. இவற்றைத்தான் அறு பகை என்கிறோம். அநுபவத்தில் பயம், சோகம், காமம், அழுகை ஆகிய இந்த நான்கையும் ஜயித்து விட்டாலே போதும். அதுதான் மோக்ஷம்.

— காமகோடிபீடம் ஆசார்ய ஸ்வாமிகள்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 38?

விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 11 உ (27-8-65)


## மூதூர் பிரதிநிதியின் முன்மாதிரி

மூதூர் தொகுதி பிரதிநிதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச்சேர்ந்தவருமான மஜீத் அவர்கள், தேசீய அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தைப் பாராட்டிப் பிரதிநிதிசபையில் பேசி இருப்பது விசேஷமாகக குறிப்பிடத்தக்கதாகும். எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் அரசாங்கம் நல்லது செய்தாலும்கூட கண்ணைமூடிக்கொண்டு எதிர்க்க வேண்டுமென்று சில அரசியல் வட்டாரங்களில் தவறான கருத்து நிலவுவதுண்டு. அவ்விதமின்றி எதிர்க்கட்சியைச் சேர்ந்திருந்தும் மூதூர் பிரதிநிதி, நிதிஅமைச்சர் மிக மேலான முறையில் தம் கடமையைச்செய்திருக்கிறாரென்றும் எந்தச் சமூகத்துக்கும் மாறாக வேற்றுமை காட்டவில்லை என்றும் துணிச்சலுடன் போற்றியுள்ளார். ஜனநாயக வளர்ச்சிக்கு இம் மேலான முன்மாதிரியாகும்.

இத்துடன் அவர் நிற்காமல் தமது கட்சியிலே வகுப்புவாதம் பேசுபவர்களுக்கும் சரியான ஒரு சூடு கொடுத்துள்ளார்... ''நான் இந்தப் பக்கம் இருப்பினும் வகுப்புவாதத்தை ஆதரிக்க நான் தயாராக இல்லை. அதை எதிர்க்கிறேன். நாட்டுக்கு வகுப்புவாதத்தால் பெரும் கேடு ஏற்பட்டுவிட்டது. இதனால் எந்த வகுப்பும் முன்னேற முடியாது'' என்று கூறிவிட்டு ''மொழிப்பிரச்னையில்பிரதமர் நாட்டைத் தமிழருக்கு விற்றுவிட்டதாகக் கூறுவது சரியல்லவென்றும் வகுப்புவாதத்தை நம்பிப் பிழைக்கும் கட்சிகள் அதை விட்டுவிட வேண்டுமென்று'' ஆணித்தரமாகப் பேசியிருக்கின்றார். எதிர்க்கட்சிகளில் சிலர் கேவலம் அரசியல் சுயநலத்துக்காக வகுப்புவாதத்தைக் கிளப்பிவிட முயலுவது பகிரங்க ரகசியம். மஜீத் அவர்களது பேச்சு சீர்திருத்த உதவுமாயின் அது இந்நாட்டின் அரசியலுக்கே மிகவும் நல்லது.

நமது அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடிப் பேசித் தங்கள் வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், தேசீய ஒற்றுமையும் சீரான நல்லுறவும் இல்லாவிடின் எவ்வித முன்னேற்றமும் ஏற்படமுடியாதென்ம்று சரியாக அறிவுறுத்தியுள்ளார் அவர். நாடு சுதந்திரம்பெற்ற பின் இங்கு செய்யப்பட்டுவிட்ட பல அரசியல் தவறுகளே நாட்டின் முன்னேற்றத்தைப் பெரிதும் தடைப்படுத்தியுள்ளன.

இதை உணர்ந்தே பல கட்சிகளைச் சேர்ந்த ஒரு தேசீய அரசாங்கத்தைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அரசியல் ஞானத்துடன் அமைத்துள்ளார். என்றாலும் ஜனநாயக தர்மத்தில் நம்பிக்கையுள்ளவர்களில் பலர் எதிர்க்கட்சியில் இன்னும் இருந்துவருகிறார்கள். அவர்களது ஒத்துழைப்பையும் பிரதமர் பெறமுடியுமாயின் இலங்கையின் அரசியல் எதிர்காலம் மிக மேலாக இருக்குமென்பதில் ஐயமில்லை. நாட்டிலே ஆக்க வேலைகள் பல செய்யப்படவேண்டி உள்ளன. இதற்குக் கூடுமானவரை எல்லாருடைய ஆதரவும், ஒத்துழைப்பும்வேண்டும். சுயநல அரசியல் போட்டிகளிலும், வகுப்புவாதங்களிலும் இனி நமது நேரத்தையும், சக்திகளையும் வீணக்கமுடியாது.

ஏற்கனவே எதிர்க்கட்சியிலிருந்து சில மெம்பர்கள் அரசாங்கக் கட்சிக்கு வந்துள்ளனர். இனியும் சில அரசாங்கத்துடன் சேர ஆவலுடன் இருப்பதாயும் கூறப்படுகின்றது. இவையெல்லாம்நாட்டின் தேசியஒற்றுமைக்கு நல்ல அறிகுறிகள். அற்பவேற்றுமைகளை வளர்த்துக் கொண்டு போவதற்கு இது சமயமல்ல. வேலை நிறுத்தம் முதலியவற்றைக் கூடுமானவரை தவிர்த்து, ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதிநிதிகளனைவரும் எவ்வளவுக்கெவ்வளவு விட்டுக் கொடுத்து ஒத்துழைக்க முடிகிறதோ அவ்வளவும் இங்கு பொதுமக்களால் வரவேற்கப் படுவதுடன், இலங்கையின் எதிர்காலத்துக்கும் மிக நன்மையாகும்.

## ஆக்கம்தரும் அன்னைவழிபாடு

யாழ்ப்பாணம், வியா.

''அன்னை வழிபாடு என்று சொல்லும்போது, சிவத்தை விட்டு வேறாகாத சிவசக்தியை வழிவடுவது ஆகும். அதுவே சிவவழிபாடு என்று சொல்லாமலே அமையும்'' என்று சென்ற திங்கட்கிழமை அளவெட்டி வடக்கு மாரியம்மன்சந்நிதியில், லட்சார்ட்சனைப் பூர்த்தி விழாவில், ''ஞானதீபம்'' பத்திராசிரியர், பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா பேசுகையில் குறிப்பிட்டார்.

பண்டிதர் திரு. நவரத்தினம் தலைமைவகித்தார்.

திரு. சர்மா தமதுபேச்சின் போது மேலும் குறிப்பிட்டதாவது:-

தந்தையிடத்தே ஒன்றைப் பெறவிரும்பும் பிள்ளை தாய் மூலமாக அதனை இலகுவில் பெறுவதைக் காணலாம். அவ்வாறே அன்னை பராசக்தியை ம்க்கள் யாவரும் இலகுவாக வழிபட்டு இட்டசித்திகளைப் பெற்று உய்தி அடையலாம்.

பிள்ளைக்கு என்னவேண்டுமென்பதைப் பெற்ற தாய் அறிவாள். ஆதலால் தாயே எனக்கு என்னது வேண்டுமெனப் பிள்ளை தாயிடத்தே கேட்கவேண்டியது இல்லை அதவே நிஷ்காமிய வழிபாடாகும்.

முன்யோசனை எதுவுமின்றி

# ஆனந்தக் காட்சி

கோவில்களில் ஏன் இப்படி பக்தர்கள் நெருக்கியடித்துச் சுவாமியைத் தரிசிக்கவேண்டும் என்ற கேள்விக்கான பதில் நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவின்போது கிடைத்தது. கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட அந்த ஒரு திருமுருகனின் அழகுக் கோலத்தைக் காண யாருக்குத்தான் ஆசையிராது, ஆவலிராது?

கோலமாமயிலில் கோலாகல வள்ளி, தெய்வயானையுடன் அந்த முருகனின் அழகுக் காட்சி- அவன் தேரைவிட்டு இறங்கி வரும்போதுதான் அந்தக் காட்சியைக் காண வாய்ப்புக் கிடைத்தது. கோயிலுள் இருந்தபடியே அவனை எதிர்கொண்டழைக்க உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள் ஊற்றென வெதும்பியூற்ற ஊசி காந்தத்தினைக் கண்டணுகல்போல ஓர் உறவு முன்னி உன்னிபாடி ஆடிக்குதித்து நிற்கும் பக்தர்கள் யார் பக்கத்திலிருக்கிறார்கள் என்பதை எப்படிப் பார்க்க முடியும்? கோயில்களில் நெருக்குகிறார்களென்றால் பக்தியே தவிர வேறெதுவுமல்ல என்ற ஒரு உண்மை புலனாகியது.

அந்த அழகு முருகன் தேரைவிட்டிறங்கி கோயிலுள் வந்தம் கண்ணால் நீர் பாயாத கண்களே கிடையாது. ஆடலும் பாடலும் ஆர்ப்பரிப்பும். அவனுக்கு அர்ச்சனை செய்யக் காத்திருந்தவர்கள் அவன் கமல பாதங்களில் கொட்டிக் காணிக்கை செலுத்த தாம் கொணர்ந்திருந்த பொருள்களுடன் எத்தனை அவதிகொண்டார்கள். முக்கனிகளும் தேங்காய் புஷ்பங்களும் பக்தர்கள் வைத்திருந்தது ஒரு நினைவை எழுப்பியது. 'உலகெலாம் உய்ய வீதிவலம் வந்த வேலனே நீ களைத்திருப்பாயே இந்தா இதையெல்லாம் ஏற்றுக்கொள்' என அவருக்குச் சொல்லிக் கொடுக்கத்தான் காத்திருந்தார்களோ? அந்த கந்தன் கோயிலுள் வந்ததும் மாமுகில் கண்ட மயில் ஆடுமாமே அதுபோல் உடலில் செடில் குத்தி காவடி ஆடினர் பல பக்தர்கள். ஒரு முறை அதைக் கண்டு ஒரு முறுவல் பூத்தான் முருகன். இப்படியே பக்தர்களின் ஆனந்தக் கூத்துக்களை அவன் நன்கு ரசித்தான் என்பது நன்கு புலனாகியது. இல்லாவிடில் அந்த முருகன் ஒவ்வொரு முறையும் பார்க்கப் பார்க்க இப்படி ஜோதிமயமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பானா! பக்தர்கள் அவனுக்கு அன்பைச் செலுத்தச் செலுத்த அவனுக்கு ஆனந்தம் உண்டாகியதைத்தான் அந்தப் பிரகாசம் வெளிப்படுத்தியதா? குழந்தையாய் குமரனாய் மனிதகுலமெல்லாம் வாழ தேரேறி வந்த அந்தக் கந்தனைப் பார்த்த நிறைவு வார்த்தையால் கூறமுடியாது!

-கணேஷ்

## செயல்வீரர் இராஜவரோதயம்



திருகோணமலைப் பாராளுமன்றப் பிரதிநிதியாக பன்னிரண்டு ஆண்டுகள் கடமையாற்றியவரும் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவருமான காலஞ்சென்ற திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நினைவுதினம் இன்று (27-8-65) ஆகும்.

சிறந்த சமயசமூகசேவையாளரான திரு. ராஜவரோதயம் 1952-ம் ஆண்டு அரசியலில் நுழைந்தார். எல்லாருக்கும் நல்லவராக, ஏழைப்பங்காளனாக இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் இதயங்களில் நீக்கமற நிறைந்து விளங்கும் 'அமரர் வரோதயர்' ஒரு செயல் வீரராவர்.

நானூறு ஆண்டுகளுக்முன்னர் போர்த்துக்கீயர்களால் இடித்துத்தள்ளப்பட்ட திருக்கோணேசராலயத்தைப் புனருத்தாரணஞ்செய்து கும்பாபிஷேகஞ் செய்துவைப்பதற்காகவே பிறந்ததுபோல் அமரர் வரோதயரின் வாழ்வும் கும்பாபிஷேகம்முடிந்து நான்குமாதங்களுக்குள் அஸ்தமித்தது.

12 ஆண்டுகளாக திருமலை அரசியல்வானில் முடிசூடா மன்னனாக விளங்கியவர் அமரர்வரோதயர். மேடைகளில் பேசுவதில் சிக்கனம் காட்டும் வரோதயர் பண விஷயத்தில் சிக்கனத்தைக் காட்டுவது இல்லை. தான் கடன்பட்டாவது கேட்போருக்கு இல்லையெனாது வாரிவழங்கும் வள்ளல் தன்மை பொருந்திய அமரர் வரோதயர் போன்ற தலைவனை, பெருமகனை, ஏழைப்பங்காளனை, நேர்மையாளனை எந்தக்காலத்திலும் ஈழத்தமிழுலகம் காணமுடியாது.

— சி. குருநாதன்.

ஒருகுரங்கு வில்வதளைகளைப் பறித்துச் சிந்தியது. அவை வில்வமரத்தின் கீழே வீற்றிருந்த எம்பிரான் பிராட்டி மீது விழுந்த புண்ணியமே லீட்டினால் அக்குரங்கு பின் முசுகுந்தச் சக்கரவர்த்தியாகப் பிறந்து அரசாளும் பாக்கியம் பெற்ற என்றால் அம்பிகையின் திருப்பெயர்களை பக்தியோடு ஒருலட்சம்முறை சொல்லி இலட்சம் வில்வதளைகளை அம்பிகையின் திருவடிகளில் சொரிந்த புண்ணியம் இக்கி [illegible] பயனைத் தரவல்லதே.

## மக்கள் பணி

வல்வெட்டித்துறை, வியா.

வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் நிர்மாணிக்கப் படவிருக்கும் திருப்பணி வேலையை 2 லட்சம் ரூபா செலவில் செய்து முடிப்பதற்கு அவ்வூர் மக்கள் முன்வந்துள்ளனர்.

இன்னொரு அன்பர் ஊறணி அரசினர் வைத்தியசாலைக்கு ஒரு லட்சம் ரூபா செலவில் பிரசவவிடுதியொன்று அமைத்துக் வருகிறார்.

வல்வை சிதம்பராக்கல்லூரி இடநெருக்கடியைத் தவிர்க்கும்பொருட்டு அவ்வூர் மக்கள் 20,000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைச் சேகரித்து கட்டிட வேலைக்கென கல்லூரி பொறுப்பாளரிடம் கொடுக்கமுன்வந்துள்ளனர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

கத்தையே நம்பியிருக்கலாம். பலநோக்குச் சங்கங்களில் அவர்களுக்கு நம்பிக்கையும் பலப்படும்.

--கலப்பை

## களத்து மேடு

போனவருடம் மழைபெய்யாது வேளாண்மை தவறிவிட்டபடியினால் யாழ்ப்பாணத்துக் கமக்காரருக்கு இவ்வருடம் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதை ஓரளவு நிவர்த்தி செய்யும்பொருட்டு அரசாங்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. நெற்பயிர் செய்வோர் இச்சங்கங்களுக்கு வரிப்பணமாகப் பரப்பு ஒன்றுக்குப் பதின்மூன்று சதம் கட்டவேண்டும். அவ்விதம் முற்பணம் கட்டுபவர்களுக்குப் புசல் ஒன்று ரூபா 12-40 ஆக விதை நெல் கொடுக்கப்படும். வேறிடங்களில் வாங்குவதாயிருந்தால் குறைந்தது 18 ரூபாவாவது வேண்டும். ஆகையால் இந்தத் திட்டத்தை எல்லோரும் வரவேற்பார்கள். ஆனால் அதற்கு மாறாக பலர் இதை விரும்பவில்லை என்று தெரிகிறது.

இதற்குக் காரணம் யாது என்று விசாரித்தபோது கமக்காரர் கூறுவது இதுதான். நிலப்பாங்குக்கு ஏற்றபடி நெல்லைத் தெரிவு செய்ய வேண்டும். ஒரு நிலத்தில் விளையும் நெல்லை இன்னொரு நிலத்தில் விதைத்தால் விளைச்சல் குறைந்துவிடும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே மேட்டு நிலம், பள்ள நிலம், உவர்மண், களிமண் என்று நிலத்துக்கு நிலம் வித்தியாசப்படும். இன்ன வகையான நிலத்தில் இன்ன வகையான நெல்தான் நன்றாக விளையும் என்று பார்த்துத்தான் அனுபவப்பட்ட கமக்காரர் நெல் விதைப்பார்கள்.

அரசாங்கம் கொடுக்கும் நெல்லில் தெரிவு செய்ய முடியாது. எந்தவிதமான நிலமாயிருந்தாலும் அவர்கள் கொடுக்கும் நெல்லையே வாங்கவேண்டும். விலை குறைவாயிருந்தாலும் பொருத்தமில்லாத நெல்லை விதைத்து வேளாண்மையைக் கெடுத்துக்கொள்ளாமல் கூடிய விலை கொடுத்தாவது நல்ல நெல் வாங்க வேண்டுமென்பதே கமக்காரரின் நோக்கம். அரசாங்கம் அநேகமாக வன்னிப் பகுதிகளில் விளைந்த நெல்லையே யாழ்ப்பாணத்துக் கமக்காரருக்கும் வழங்கும். அந்த நெல் யாழ்ப்பாணப் பகுதிகளுக்குப் பெரும்பாலும் பொருத்தமாயிராது.

சென்ற வாரம் பெய்த மழைக்குப்பின் நெல் வயல்களில் வரம்பு கட்டுதலும், குப்பை பரவுதலும், உழவும் மும்முரமாக நடைபெறுகிறது. ஆனால் ஒருவரும் விதைக்க நினைக்கவில்லை. இந்த மழையின் ஈரம் காயாமல் இருந்தால் ஆவணி மாதம் 15ம் திகதியளவில் பலரும் விதைக்கத் தொடங்கிவிடுவார்கள். இதற்கிடையில் கடும் வெய்யில் காய்ந்தால் இன்னுமொரு மழையைக் கண்டுதான் விதைப்பதற்கு யோசிப்பார்கள். இந்த மழையைக் கண்டதும் புல்பூண்டுகள் எதேஷ்டமாக வளரத் தொடங்கி விட்டன. இப்பொழுது வயல்களை உழுதுவிட்டால் வெய்யிலுக்கு அவை காய்ந்து கருகிவிடும். மறுபடியும் விதைப்பதற்குமுன் ஓர் உழவு உழுதுவிட்டு, நெல் விதைக்கலாம்.

இனிவருங்காலத்தில் கமக்காரருக்கு என்னவகை நெல் தேவைப்படும் என்பதை அவர்களிடம் கேட்டறிந்து அந்த நெல்லைத் தேடிக் கொடுக்க அரசாங்கம் முயல வேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் விதை நெல்லுக்கு வேறெங்காவது அலைந்து திரியாமல் அரசாங்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென் வியட்னுமில் 1000 கொரில்லாக்கள் பலி

சைகோன், ஆக. 26

தென்வியட்னுமில் கடந்த வாரத்தில் வியட்காங் கொரில்லாக்களுக்கு எதிராக நடைபெற்ற சண்டைகளில் 59 அமெரிக்கத் துருப்புகளும் 120 தென் வியட்னும் அரசாங்க துருப்புகளும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே வாரத்தில் ஒரு பகுதியில் நிகழ்ந்த சண்டைகளில் இவ்வளவு தொகையான அமெரிக்கத் துருப்புகள் மாண்டது இதுவே முதற்தடவை என்று தென் வியட்னுமிலுள்ள அமெரிக்க ராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சண்டைகளில் ஆயிரத்துக்கு மதிகமான வியட்காங்கிய கொரில்லாக்கள் பலியாகியுள்ளனர்.

இதற்கிடையே வடக்கு வியட்னுமில் அமெரிக்க, தென்வியட்னும் விமானங்கள் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

# "24 மணிநேரத்தில் 195 இந்திய துருப்புகள் பலி"

## சண்டை நீடிப்பதாக "காஷ்மீர் குரல்" அறிவிப்பு

ராவல்பிண்டி, ஆக. 26

ஜம்மு-காஷ்மீர் பள்ளத்தாக்கில் ரஜௌரி பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் நடைபெற்ற சண்டையில் 195 இந்திய துருப்புகள் கொல்லப்பட்டதாக 'காஷ்மீர் குரல்' வானொலி அறிவித்துள்ளது.

'காஷ்மீர் விடுதலை இயக்கத்தினரின் மாபெரும் தாக்குதல் இது' என்று அறிவித்த காஷ்மீர் குரல் வானொலி, 24 மணி நேரத்தில் இவ்வளவு தொகையினர் இந்திய தரப்பில் பலியானது இதுவே முதற்தடவை என்றும் கூறியது.

'ரஜௌரி பகுதியில் நேற்று இந்திய துருப்புகளுக்கும் காஷ்மீர் விடுதலை இயக்கத்தினருக்குமிடையே நிகழ்ந்த சண்டையில் 120 இந்தியத் துருப்புகள் கொல்லப்பட்டனர். ஐந்து இந்திய இராணுவ டிரக்குகள் அழிக்கப்பட்டன. அதே இடத்தில் நடந்த மற்றுமொரு சண்டையில் 65 இந்திய துருப்புகள் கொல்லப்பட்டனர்' என்று 'காஷ்மீர் குரல்' அறிவித்துள்ளது.

காஷ்மீர் விடுதலை இயக்கத்தினர் தரப்பில் இருவர் கொல்லப்பட்டனராம்.

'இந்திய துருப்புகளிமிருந்து ஏராளமான வெடி மருந்துகளும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன, தந்தித் தொடர்புகள் பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளன. இந்திய ராணுவத்தினருக்கு விமான மூலம் உணவு விநியோகிக்கப்படுகிறது' என்றும் அந்த வானொலி அறிவித்திருந்தது.

## நகரசபையில் 'அமளிதுமளி'

இந்தூர், ஆக. 26

கடைவாயிலில் 'கியூ'வில் நின்று கொண்டிருந்த ஒரு மில் தொழிலாளி மயக்கமடைந்து வீட்டுக்குக் கொண்டு போகப்பட்டபின் மரணமடைந்தது குறித்து இந்தூர் நகரசபையில் எதிர் கட்சியினர் கொண்டு வந்த அவசரப்பிரேரணைக்கு தலைவர் அனுமதி கொடுக்கமறுத்தார். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்துக்கிடையே சபை திடீரென்று ஒத்தி வைக்கப்பட்டது.

நகரசபைக் கூட்டத்தில் சுதந்திரக்கட்சி மெம்பர் ஒருவர் இதுபற்றி அவசரப் பிரேரணை கொண்டுவர முயற்சித்தார். ஆனால் சபைக்கு தலைமை வகித்த உபதலைவர் உணவுக்கும் நகரசபைக்கும் சம்பந்தமில்லை என்று கூறி, அதை அனுமதிக்க மறுத்தார். பல எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் உடனே மேஜை மீது ஏறி, பல விதமான கோஷங்களைக் கோஷித்தனர். அமைதியை ஏற்படுத்தப் பல முறை முயற்சித்தும் முடியாமல் போகவே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

## பத்தேசிங் நிராகரித்தார்

புதுடில்லி, ஆக. 26

பஞ்சாபி சபா அமைக்க வேண்டும் என்ற விஷயத்தில் உண்ணுவிரதம் அனுஷ்டிக்கவேண்டாம் என பிரதம மந்திரி சாஸ்திரி விடுத்த வேண்டுகோளை அகாலி தலைவர் சந்த்பதேசிங் நிராகரித்து விட்டார்.

## சவர்க்கார் சுகவீனம்

பம்பாய், ஆக. 26

பிரபல புரட்சிக்காரரர் வீர சவர்க்கார் கடுமையான சுகவீனமுற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. 83 வயதான சவர்க்கார் முன்பு ஹிந்தி மகாசபைத் தலைவராக இருந்தார்.

## கம்பியில் தொங்கும் ரயில்

பெர்லின், ஆக. 25

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 2115 அடி உயரமுள்ள துரிஞ்சியன் மலை சிகரத்துக்கு நாள்தோறும் சுமார் 4000 உல்லாசப் பிரயாணிகள் கம்பியில் தொங்கிக் கொண்டு ஓடும் புகை வண்டியில் பிரயாணம் செய்கின்றனர். கடந்த வருட கோடைகால விடுமுறையின் போது மட்டும் மொத்தம் 350,000 உல்லாசப் பிரயாணிகள் கம்பியில் தொங்கிக் கொண்டு ஓடும் ரயில் மூலம் இந்த மலைச்சிகரத்துக்குச் சென்று வந்தனர்.

## ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்

ஆக்லாந்து, ஆக. 26

நியூசிலாந்திலேயே முதல் முதலாக ஒரு பிரசவத்தில் ஐந்து குழந்தைகளைப் பெற்ற லாசன் தம்பதிகளுக்கு ஒரு மாரிஸ் ஆக்ஸ்போர்டு கார் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நாடெங்கிலுமுள்ள பல சரக்குக் கடைகள் அப்புத்தம் புதியகாரை அளித்தன.

இக்காரின் பதிவு எண் எப். டி. 5555. அந் நான்கு '5' களுடன் மற்றோர் 'ஐந்'தையும் சேர்க்கப் புதிய அதிகாரிகள் முயன்று தோல்வி கண்டனர். ஏனெனில், சட்டப்படி அவ்வாறு செய்ய இய[illegible]

இந்தியபடைகள்

# யுத்தநிறுத்தஎல்லையைதாண்டியது தவிர்க்கமுடியாத நடவடிக்கை

## தாக்குதல் காரர்களுக்கு காஷ்மீர்மொழிதெரியாது

### நிர்வாக கமிட்டிகூட்டத்தில் சாதிக் அறிவிப்பு

ஸ்ரீநகர், ஆக. 26

"இந்திய பந்தோபஸ்து படைகள் ஜம்மு-காஷ்மீர் போர் நிறுத்தக் கோட்டைத் தாண்டி இரு நிலைகளை அமைத்திருப்பது ஒரு தவிர்க்க முடியாத நடவடிக்கையாகும். ஜம்மு-காஷ்மீரில் பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களின் தீவிர முயற்சிகளை முறியடிப்பதே புதிய நடவடிக்கையின் நோக்கமாகும்" என்று ஜம்முகாஷ்மீர் முதன்மந்திரி திரு. சாதிக் அறிவித்துள்ளார்.

இந்திய பந்தோபஸ்து படைகளின் புதிய நடவடிக்கைகள் குறித்து திரு. சாதிக் நேற்று நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் பேசினர்.

"ஜம்மு-காஷ்மீரில்பாகிஸ்தானிய தாக்குதல்காரர்களை முற்ருக ஒழித்துக் கட்டுவதே எமது முக்கியநோக்கமாகும். எமது பகுதியில் ஊடுருவல்காரர்களில் ஒருவரைக்கூட விட்டுவைக்க மாட்டோம்" என்றும் திரு. சாதிக் கூறினர்.

"ஜம்மு. காஷ்மீரில்பாகிஸ்தான் மேற்கொண்டஎல்லா நடவடிக்கைகளும் தோல்வியில் முடிந்திருக்கின்றன, இங்கு தாக்குதல் நடத்தியவர்கள் பாகிஸ்தானியர்கள் அல்ல என்றும் அவர்கள் காஷ்மீர் விடுதலை இயக்கத்தினர் என்றும் முழுக்க முழுக்க அவர்கள் காஷ்மீரையே சேர்ந்தவர்கள்தான் என்றும் பாகிஸ்தான் கோருகிறது. இது அப்பட்டமான பொய்யாகும். தாக்குதல் காரர்கள் காஷ்மீரைச் சேர்ந்தவர்களல்ல. அவர்களுக்கு காஷ்மீர்மொழி சிறிதளவும் தெரியாது. இதிலிருந்து அவர்கள் பாகிஸ்தானியர்கள்தான் என்பதை நன்ருக நிரூபிக்க முடியும். வெளிஉலகத்தை பாகிஸ்தான் ஏமாற்ற முடியாது" என்றும் திரு. சாதிக் குறிப்பிட்டார்.

## மாண்டவர் மீண்டார்!

ஷிமோகா, ஆக. 26

ஈமச்சடங்குகள் அத்தனையும் முடிவடைந்து பிரேதம் 'பாடை'க்குள் வைக்கப்பட்டுத் தூக்க வேண்டிய கட்டத்தில் பிரேதம் மீண்டும் உயிர்பெற்ற சம்பவம் இங்கு இடம்பெற்றது.

இறந்து பிரேதமாகிவிட்டதெனக் கருதப்பட்ட அந்தப் பெண் பின்னர் டாக்டரிடம் காண்பிக்கப்பட்டார்.

அந்தப் பெண் மரணமடைந்துவிட்டார் என்பதற்காக அழுது கண்ணீர் வடித்த உற்ருர் உறவினர் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர்.

## சாவன் நடவடிக்கைக்கு லோகசபையில் பாராட்டு

புதுடில்லி, ஆக. 25

தாக்குதல் காரர்களின் ஊடுருவலை முறியடிப்பதற்காக இந்திய பந்தோபஸ்து படைகள், இரு இடங்களில் யுத்த நிறுத்த எல்லையைத் தாண்டி இரு புதிய நிலைகளை அமைத்திருப்பதாக இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வை. பி. சாவன் நேற்று இந்திய லோகசபையில் அறிவித்த பொழுது அங்கத்தவர்கள் கரகோஷம் செய்து பாராட்டினர்.

பாதுகாப்பு மந்திரியின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது என்று லோகசபையிலிருந்த அங்கத்தவர்கள் பலர் கருத்து வெளியிட்டனர்.

**இருமைல் உள்ளே**

இந்திய பந்தோபஸ்து படைகளின் புதிய நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் நேற்று லோகசபையில் விபரமாக வெளியிட்டார்.

"இரு இடங்களில் யுத்த நிறுத்த எல்லைக்கோட்டைத் தாண்டி இரு புதிய நிலைகளை இந்திய பந்தோபஸ்து படைகள் அமைத்திருக்கிருர்கள். இந்த இரு நிலைகளும் யுதத நிறுத்த கோட்டிலிருந்து உள்ளே இரண்டு மைல் தூரத்தில் அமைத்திருக்கின்றன. கடல் மட்டத்திலிருந்து 8,900 அடி உயரத்தில் இந்த நிலைகள் இருக்கின்றன." என்றும் பாதுகாப்பு மந்திரி கூறினர்.

**'தற்காப்பு நடவடிக்கை"**

போர் நிறுத்தக் கோட்டை மீறவேண்டுமென்பது இந்தியாவின் நோக்கமல்ல. ஆனல் தாக்குதல் காரர்களின் திட்டங்களை முறியடிப்பதற்காகவே இந்த தற்காப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம். பாகிஸ்தானிய காரர்களை எமது நடவடிக்கைகளினல் நிலைகுலைந்து விட்டனர். அவர்கள் நாலா பக்கமும் சிதறி ஓடுகின்றனர்" என்றும் அவர் கூறினர்.

## ஸ்ரீநகரில் அமைதி

ஸ்ரீநகர், ஆக. 26

ஸ்ரீநகரில் கடந்த 24 மணி நேரத்தில் எந்தவித சம்பவங்களும் நிகழவில்லை என்றும் இங்கு அமைதி நிலவுவதுடன், ஸ்ரீநகர் வழமை போல் இருக்கிறது என்றும் இன்று அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானிய விமானங்கள் பல தடவைகளில் போர்நிறுத்தக் கோட்டைக் கடந்து ஜம்மு—காஷ்மீர் வானப்பிராந்தியத்தின் மீது பறந்துசென்றதாக இந்தியா அறிவித்துள்ளது.

## படுகொலை

ஆலங்குளம், ஆக. 26

வாலிபரை படுகொலை செய்து சுடுகாட்டில் வைத்து எரித்து வேகளு பிணத்தின் ஒரு பாகத்தை எடுத்து குழிதோண்டிப் புதைத்தார்களாம். பொலிஸார் பிணத்தைக் கைப்புற்றி கிராம் அதிகாரி உட்பட ஆறு பேரைக் கைது செய்துள்ளார்கள்.

ஊத்துமலை பொலிஸ் சரகம் கண்ணுடிக்குளம் கிராமத்தில் கருப்பன் மகன் வேலுநாதர் என்பவருக்கும் அதே கிராமத்தைச் சேர்ந்த கிராம அதிகாரி வகையருவுக்கும் ஏற்பட்ட தகராறின் பேரில் வாலிபரைப் படுகொலை செய்து கண்ணுடிகுளம் சுடுகாட்டில் வைத்து எரித்ததாகவும், பிணத்தின் ஒரு பாகம் வேகாமல் இருந்ததை வெளியே எடுத்து முத்தம் மாள்புரம் கிராமத்தில் ஒரு நிலத்தில் புதைத்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இதுபற்றி படுகொலை செய்யப்பட்ட வாலிபரின் அண்ணன் யொலிஸில் புகார் செய்ததன் பேரில் ஊத்துமலைப் பொலிஸார் ஸ்தலத்துக்குச் சென்று புதைத்த [illegible]

## 'வடவியட்னும், சீனவை "ஜெமினி-5" கண்காணிக்கிறது'

### பீகிங் குற்றச்சாட்டு

பீகிங், ஆக. 25

அமெரிக்காவின் விண்வெளிக்கப்பலான 'ஜெமினி-5' சீன, வடவியட்னும், கியூபா ஆகிய இடங்களுக்கு மேலாகப் பறந்து சென்று இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணித்திருக்கிறதென்று பீகிங் குற்றஞ் சுமத்தியுள்ளது.

இது அமெரிக்காவின் ஒரு திட்டமாகும் என்றும் பீகிங் அறிவித்துள்ளது.

தற்பொழுது விண்வெளியில் பறந்துவரும் 'ஜெமினி-5' வானவெளிக்கப்பல், வடவியட்னும்மீது பதினறு தடவைகளும், சீனமீது பதினன்கு தடவைகளும், கியூபாமீது பதினெரு தடவைகளும் இதுவரை பறந்து சென்றிருக்கிறது என்றும் பீகிங் கூறுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

## 52 பேர் பலி

கார்ட்டூம், ஆக. 2

சூடானில் அரசாங்க கடைகளுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்குமிடையே நிகழ்ந்த கைகலப்பில் 52 கிளர்ச்சிக்காரர்கள் பலியானர்கள்.

## நியூயோர்க்கில் நிம்மோ

நியூயோர்க், ஆக. 26

காஷ்மீருக்கான ஐ. நா. பிரதம பார்வையாளர் திரு. நிம்மோ, இன்று நியூயோர்க் வந்து சேர்ந்தார். யுதாண்டின் அழைப்பின்மீது அவர் இங்குவந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர்கள் வேறுநாடுகளுக்கு சென்றும் வாழலாம்'

## சிறிமாவின் பேச்சு

நுவரேலியா, வியா.

'சிங்களமக்களுக்கு இலங்கை மட்டுமே அவர்கள் வசிப்பதற்கு ஒரு நாடாக இருக்கிறது. தமிழர்களுக்கு பல நாடுகள் இருக்கின்றன. அவர்கள்அங்குசென்று வாழலாம். தற்போதுள்ள நிலை நீடித்தால்சிங்களவர்களுக்கு வாழ்வதற்கு இடமில்லாமற் போய்விடும். துட்டகைமுனு மன்னன் முன்னரேயே தெரிவித்தநிலை உண்மையாகிவிடும்.'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திருமதி சிறிமா மேலும் பேசுகையில் கூறியதாவது:

### சட்டவிரோதகுடியேற்றம்

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடைசெய்ய முந்திய அரசாங்கம் எடுத்த நடவடிக்கையெல்லாம் இப்போதுள்ள அரசாங்கத்தினால் அர்த்தமில்லாமல் செய்யப்படுகின்றது.

மன்னாரில் சட்டவிரோதக் குடியேற்றக்காரருக்கு 10,000 ஏக்கர் காணியை ஒதுக்கிக்கொடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அறியப்படுகிறது. இதில் முந்திரிக்கொட்டை பயிரிட அரசாங்கம் உதவுமாம். இங்கு முந்திரிக் கொட்டை உற்பத்தியாகாது. ஆனால் 'கள்ளத் தோணிகள்' தான் உற்பத்தியாகும்.

எம்மை வகுப்புவாதிகள் எனக் குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆனால் நாம் குற்றவாளிகளல்ல. 1958-ம் வருடத்தில் இடம்பெற்ற வகுப்புக் கலவரத்துக்கு பத்திரிகைகளே பொறுப்பானவை. இவ்வித பத்திரிகைகளை மக்கள் தொடர்ந்தும் வாசித்து வந்ததால் இதுபோன்ற விளைவே மீண்டும் ஏற்படும்.

வரவு—செலவுத் திட்டம் பற்றி அவர் குறிப்பிடுகையில் முதலாளி வர்க்கத்தினருக்கு பாதகமானதாக அது இருப்பதாகக் குறிப்பிட்டார்.

திரு. வில்லியம் பெர்னாண்டோ பேசுகையில், 'கள்ளத்தோணிகளுக்கு' எதிராகப் போராட்டம் செய்த ராஜரத்தினு தற்போது நாட்டுக்குள் 'கள்ளத் தோணிகளை'க் கூட்டிவர முயற்சிக்கிறார் என்றார்.

தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசுகையில், நாடு இப்போது தமிழர்களாலும், முஸ்லிம்களாலும், கத்தோலிக்கர்களாலும் ஆட்சி செலுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

## "நாட்டிற்கு சேவை செய்க"

திருக்கோணமலை, வியா.

தனிமனிதனுக்குச் செய்யும் சேவையிலும் பார்க்க ஒரு ஸ்தாபனத்தின் மூலம் நாட்டிற்குச் சேவை செய்யும் சேவை மகத்தானதாக இருக்கும். ஆனால், களியாட்டுக் கேளிக்கைகளுக்கு கூடும் மக்கள் கூட்டம், இதுபோன்று ஆக்க வேலைகளுக்காக உழைக்கும் ஸ்தாபனங்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்'' இவ்வாறு பொ. கந்தையா திருக்கோணமலை சக்தி நிலையத்தின் 18-வது ஆண்டு நிறைவு விழாவில்பேசும்போது குறிப்பிட்டார், மேற்படி கூட்டத்திற்கு திரு. கோ. செல்லத்தம்பி தலைமைவகித்தார்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாதுகாவலர்: திருவாளர்கள். சு. ம. மாணிக்கராசா, பா. உ., பா. நேமிநாதன், டாக்டர் க, சு. கதிரவேலு, டாக்டர் சி. சிவானந்தம், முகாந்திரம் சி. முத்துக்குமாரு, சி. ஆறுமுகநாதன், பொ. கந்தையா ஆசிரியர், க. நடராசா, தலைவர். சிவஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர், உபதலைவர்: திரு. கோ. செல்லத்தம்பி, திரு, மு. இராமநாதன், செயலாளர்: ஆசிரியர் ச. சின்னத்தம்பி,உபசெயலாளர்: திரு. மு, மாணிக்கராசா, பொருளாளர்திரு.சி.சித்திரவேலு, உபபொருளாளர்: திரு. க. செல்லையா, பார்வையாளர்: திரு. க. கந்தசாமி, பரிசோதகர்: திரு. சு. கு. திருஞானசம்பந்தன், நிர்வாகசபையினர், திருவாளர்கள். க. குகதாசன், மு.சண்முகராசா, கு. சண்முகநாதன், ந. தேய்வேந்திரம். பே. தியாகராசா, கா. இராஜேந்திரம், சி. சண்முகம், மா.பாலசுந்தரம், மு. தியாகராஜா, பொ. யோகராசா.

## "பாதிக்கப்பட்டுள்ளனர்"

யாழ்ப்பாணம்,வெள்ளி

''கடந்தசில ஆண்டுகளாக வடபகுதியில் வெங்காயப் பயிர்ச் செய்கை மிக அதிகமாக அபிவிருத்தி அடைந்துள்ளது. ஆனால் கடந்த வாரத்தில் தேசிய அரசாங்கம் 10,000 அந்தர் பம்பாய் வெங்காயத்தை வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்துள்ளது. இதனால் வடபகுதி வெங்காய உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்'' என்று வலிகாமம் வடக்கு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தலைவர் திரு எஸ். விஜயானந்தன் அளவெட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தலைமைவகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''தனி வியாபாரிகளின் நன்மையைக் கருதியே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வடபகுதி விவசாயிகள் அனைவரும் இதனை எதிர்க்க வேண்டும். மேலும் அண்மையில் பெய்த மழையினால் வெங்காயச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதென்று சொல்லி அரசாங்கம் இந்தியாவிலிருந்து சின்ன வெங்காயத்தை இறக்குமதிசெய்யமுயல்கின்றது. இதனால் இந்நாட்டின் தேசிய பொருளாதாரத்தையும், விவசாயிகளையும் புறக்கணிப்பதாகும்.''

## பதவிகள் வெற்றிடம்

பம்பலப்பிட்டி, வியா.

கிழக்குப்பகுதி கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் உதவிக்கணக்காளர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகஸ்ட் 20-ம் திகதி வர்த்தமானியில் விபரங்கள் உள்ளன.

ஃ ஃ ஃ

உதவிக் களஞ்சிய அதிபர்களுக்கும் அரசாங்க களஞ்சியப் பகுதியினரால் மனுக்கள் கோரப்படுகின்றன.

ஃ ஃ ஃ

இரண்டாம்தர மொழி பெயர்ப்பாளர்களுக்கும் மனுக்கள் தற்காலிக பரீட்சாதிகாரியினால் கோரப்படுகின்றன. இதற்கான சோதனை அக்டோபர்மாதம் நடைபெறுமெனத் தெரிய வருகிறது.

## சங்கானையில் விற்பனைபகுதி கடை

சங்கானை, வியா,

விற்பனைப்பகுதி இலாகாவினால் சங்கானை பட்டின சபை எல்லைக்குள் மரக்கறி முதலிய பொருட்கள் விற்கும் கடை ஒன்று அதி விரைவில் திறந்துவைக்கப் படவிருக்கிறது. இப்படியான விற்பனைக்கடை ஒன்றை திறந்துவைக்கும்படி சங்கானை பட்டினசபை அண்மையில் தீர்மானம் ஒன்றைநிறைவேற்றியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் இக்கடையை சங்கானை சந்தைக்கருகில் திறந்துவைக்கும்படி பட்டினசபை தலைவரை கேட்டுள்ளார்கள்.

## பலர் கைது

புதுடில்லி, ஆக. 26

அரசாங்கத்துக்கு எதிராக இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொள்ள விருந்த சில திட்டங்கள் குறித்து கேரளாவில் நேற்று பலர் கைதுசெய்யப்பட்டனர்.


REGAL--JAFFNA
NOW SHOWING!
Ray Milland
in
PANIC IN YEAR ZERO
(Cinema Scope)


# 'லைட்' வெளிச்சத்தில் சந்தேகநபரை கண்டேன்

## காலஞ்சென்றவரின் மகன் சாட்சியம்

சாவகச்சேரி, வியாழன்

விடத்தல்பளை எஸ்டேட் காவலாளியான சின்னத்தம்பி கந்தையா என்ற 55 வயது வயோதிபர் தமது மகனுடன் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கும் பொழுது துப்பாக்கியினால் சுட்டுக்கொலை செய்தது சம்பந்தமாக சாவகச்சேரி மாஜிஸ்திரேட் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தி வாக்கு மூலங்களைப் பதிவுசெய்தார். விசாரணையின் பின்னர் நீதிபதி திரு. பி. ருெபேர்ட் சில்வா சந்தேக நபர்களைக் கைது செய்யும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

விசாரணையின் போது கொலையுண்டவரின் மகன் கந்தையா தங்கவடிவேலு வாக்குமூலமளித்தார். அவர் கூறியதாவது,-

'எனது தந்தை அந்தத் தோட்டத்தில் பல வருடங்களாக கடமையாற்றிவருகிறார். அவர் படுக்கைக்குச் செல்வதற்குமுன் தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பது வழக்கம். அன்று நானும் அவரும் இரவு 9 மணிக்குச் சாப்பிட்டோம். சிறிது நேரத்தின் பின் அவர் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றுவிட்டார், அவருக்கு 2 யார் பின்னால் நான் சென்றேன். எனது கையில் 5 பட்டரி டோச்லைட் இருந்தது. லைட்டை அடிக்க வேண்டாம் என்று அவர் கூறியமையால் நான் லைட் அடிக்கவில்லை. தோட்டத்தில் 1-ம், 2-ம், 3.ம் ஆட்டுப்பட்டிகளை பார்வையிட்டுவிட்டு எனது தந்தை 4-ம் பட்டிக்குச் சென்றபோது நான் அவருக்கு 30 யார் பின்னால் நின்றேன், அப்பொழுது துப்பாக்கிச்சூடு கேட்டது. அதைத் தொடர்த்து அவர் 'ஊ' என்று குளறும் சத்தம் கேட்டது. ரோச் அடிக்கும்படி கூறினார் நான் டோச்சை அடிக்காது அவரிடம் கொடுத்தேன். அவர் நின்றுகொண்டிருந்தார். ஒரு கையை வயிற்றிலும், மற்றக்கையில் லைட்டையும் வைத்திருந்தார். லைட்டை வெடிச் சத்தம் கேட்ட பக்கம் அடித்தார். அங்கே விஞசித்தம்பி வடிவேலுவும் வேறொருவர் பின்பக்கமாகத் திரும்பி நிற்பதையும் கண்டேன். விஞசித்தம்பி வடிவேலு திரும்பவும் துப்பாக்கியினால் சுட்டதும் எனது தந்தை ஐயோ என்று குளறிக்கொண்டு நிலத்தில் விழுந்தார். கையிலிருந்த லைட்டும் விழுந்து வெளிச்சமும் அணைந்தது. பின்னர் அங்கு நின்ற மூன்று பேரும் வெளியே ஓடிவிட்டனர். நான் குளறிக்கொண்டு அவருக்கருகே சென்று அவரைத் தடவினேன். உடம்பிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்படி கூறினார். அந்தச் சத்தம் கேட்டு மாணிக்கம் என்ற கணக்கப்பிள்ளை அங்கு வந்தார். சுட்டது பற்றி அவரிடம் கூறினேன். அவர் தகப்பனரைப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு மனேஜயரிடம் போய்விட்டார். நான் அங்கு நின்றேன். பின்னர் தாயார் அங்கு வந்தபோது சுட்டது பற்றி அவரிடம் சொனேன், பின்னர் எனது தந்தையார் இறந்துவிட்டதாக அறிந்தேன். பொலிஸார் வரும்வரை நானும் எனது தாயாரும் அங்கு நின்றோம். வடிவேலுவின் சகோதரர் குலசேகரம் எங்களுடன் பகையாயிருந்தார்.'

கொலையுண்டவரின்மனைவி சின்னம்மாவும் வாக்குமூலமளித்தார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது !

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 10-30
சனி ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜிகணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்

கைகொடுத்த தெய்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)

ஆறறிவு படைத்த மனிதன் தன்னினத்தைச் சார்ந்தவனையே மிருகமாக்கத் துணியும் போது எழும் உரிமைக் குரல்தான் — "நானும் மனிதன்தான்"

விஜயபுரி வீரன் புகழ் ஆனந்தன்-சந்திரகாந்தா
பாண்டி செல்வராஜ், ஷீலாதேவி, அசோகன், நாகேஷ்
கண்ணன், ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்

ஆனந்த மூவிஸ்

நானும் மனிதன்தான்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### ஏலவிற்பனைக்கு

தட்டெழுத்து யந்திரம் (ஆங்கிலம்) ஒன்று பகிரங்க ஏலத்தின் மூலம் அச்சுவேலி கி.ச. கந்தோரில் 4-9.65-ந் திகதி காலை 10-00 மணிக்கு விற்கப்படும். கந்தோர் நேரத்தில் அதனைப்பார்வையிடலாம்.

க.சுந்தரமூர்த்தி.
தலைவர்,

கிராமசபை,
அச்சுவேலி. 820




### கொழும்பு
### வெள்ளி 27-8-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தோத்திரப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்,

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகசுரம்

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர்விருப்பம் 1-00 கிளாரினெட், 10-15 தேர்ந்த இசை.

### 18வது ஆண்டு நிறைவு விழா

திருக்கோணமலை, வியா

திருக்கோணமலை சக்தி நிலையத்தின் 18வது ஆண்டு நிறைவுவிழா திரு. கோ. செல்லத்தம்பி தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகஸ்தர்களாகபின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாதுகாவலர்கள்: திருவாளர்கள் சு. ம. மாணிக்கராசா, பா. நேமிநாதன், டாக்டர் க.சு.சித்திரவேலு, டாக்டர் சி. சிவானந்தம், பூகாந்திரம் சி. முத்துக்குமாரு, சி. ஆறுமுகநாதன், ஆசிரியர் பொ. கந்தையா, க. நடராசா. தலைவர் சிவஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர். உபதலைவர்கள்: திருவாளர்கள் கோ. செல்லத்தம்பி, மு. இராமநாதன். செயலாளர்: ஆசிரியர் ச. சின்னத்தம்பி. உபசெயலாளர்: திரு. மு. மாணிக்கராஜா. பொருளாளர்: திரு. சி. சித்திரவேலு. உப பொருளாளர்: திரு. க. செல்லையா. பார்வையாளர்: திரு. க. கந்தசாமி. பரிசோதகர்: திரு.சு.கு.திருஞானசம்பந்தன்.




### 'பீட்டருக்கு' வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

இளவாலை புனிதயாகப்பர் இல்லங்களின் விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் 'பீட்டர்' இல்லம் 196 புள்ளிகளையும் 'போல்' 195 புள்ளிகளையும் பெற்றன. விஞேத உடைப் போட்டியில் வி. டானியல் முதலாவது இடத்தையும், எஸ். சவரிமுத்து இரண்டாம் இடத்தையும் ஏ. யேசுரத்தினம் மூன்ரும் இடத்தையும் பெற்றனர்.

விளையாட்டு முடிவில் ஆசிரியர் திரு. எம். டி. சூசைநாதர், இளைஞர்களின் முன்னேற்றம்பற்றியும் ஆசிரியர் திரு. சுப்பையா 'சமுதாயமும் சமாதானமும்' என்ற விஷயம்பற்றியும், ஆசிரியர் திரு. ஏ. அற்றியானந்தம் 'பெற்ரூர் கடமை' என்னும் விஷயம் பற்றியும் பேசினர். வண. அல்பிரட் சுவாமியார் 'சகோதரத்துவம்' என்னும் விஷயம் பற்றித் தமது பேச்சில் குறிப்பிட்டார். வண. பிரி. யேம்ஸ் சுவாமியார் வெற்றிபெற்ற வீரர்களுக்குப் பரிசில்களை வழங்கிஞர்.

### சுப்பையா இல்லம் வெற்றி

வல்வெட்டித்துறை, வியா.

தொண்டமாஞறு இந்து ஆங்கில பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி உப்புமால்கடற்கரை மைதானத்தில் பருத்தித்துறைப் பகுதி இளைப்பாறிய வித்தியாதரிசி திரு. வி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது இவ்வருட சாம்பியனுக சுப்பையா (பச்சை) இல்லம் இருநூறரைப் புள்ளிகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டது.

பச்சை, நீலம், சிவப்பு ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் பின்வருவோர் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

கீழ்ப்பிரிவு-ஜே. யோகேஸ்வரன், வி. தேவகாந்தன், ஏ. ஜெயராணி.

மேற்பிரிவு- கே. அருமைத்துரை, எஸ். செல்வராணி.

மத்தியபிரிவு- ஏ. துரைராசா, எஸ். செல்வராணி.

மேற்பிரிவு- எம். தம்பித்துரை, ரி. கதிர்காமநாதன், எஸ். ஆனந்தபூபதி.

வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி ரி. துரைச்சாமி பரிசில்கள் வழங்கிஞர்.

### கூடை பந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் ''ஈழநாடு'' வெற்றிக் கூடைப் பந்தாட்டம் (பாஸ்கட் பால்) சென்ற செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகியது. வட்டுக்கோட்டைக் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்கும் கோப்பாய் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற முதலாது ஆட்டம் மிகவும் கவர்ச்சியாக இருந்தது.

இடைவேளையின்போது கோப்பாய்க் கோஷ்டி 22 புள்ளிகளையும் வட்டுக்கோட்டைக்கோஷ்டி 6 புள்ளிகளையும் எடுத்திருந்தது. எதிர்பாராத விதமாக வேகமாக ஆட ஆரம்பித்தனர் வட்டுக்கோட்டைக் கோஷ்டியினர். இதன் விளைவாக ஆட்டம் முடியும் பொழுது கோப்பாய்க் கோஷ்டியினரின் புள்ளிகளையே இவர்களும் பெற்றனர். இரு கோஷ்டியினரும் தலா 24 புள்ளிகளைப் பெற்றனர். இதஞல் மேலும் ஐந்து நிமிடங்கள் தொடர்ந்து ஆட நேரிட்டது. முடிவில் கோப்பாய்க் கோஷ்டியினர் 31 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டினர். வட்டுக்கோட்டைக் கோஷ்டியினர் 28 புள்ளிகள் பெற்றனர். கோப்பாய் 31 புள்ளிகள், விக்னேஸ்வரலிங்கம் 12, கமலராசன் 8, நவராசா 4. வட்டுக்கோட்டை 28 புள்ளிகள்: விக்டர் 19, ஜெயராசா 3, துரைராசா 2, தியாகராசா 2. திரு. பரமானந்தனும், திரு. றஞ்சித் கொடிக்காறவும்மத்தியஸ்தராக்கடமையாற்றிஸர்.

### 'உடல் வலுவுக்கு பால் அருந்துங்கள்'
### மந்திரி தஹா. புத்திமதி

காலி, வியாழன்

இலங்கையர்களாகியநாம் குறைந்தளவு பாலையே உட்கொள்கிரேம். பாலை சிறிதளவாவது உட்கொள்வதில்லை. இதஞல் நாம் உடல் வலுவற்றவர்களாகிவிடுகிரேம்'' என்று உள்நாட்டு மந்திரி திரு. டபிள்யூ. தஹநாயக்கா பால்சபை திறப்புவிழாவொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பால் குடிப்பவர்கள் மிகவும் தைரியசாலிகளாகவும் நெடுநாட்களாக வாழக் கூடியவர்களாகவும் இருப்பார்களென்றும், ஆஞல் துரதிர்ஷ்டமாக நமது நாடு பாலின் அத்தியாவசியத்தை உணரவில்லையென்றும் அவர் சொன்ஞர்.

மக்கள் பாலை ஓர் அத்தியாவசிய உணவென நினைத்து கூடியளவு உட்கொள்ளவேண்டுமென்று திரு. தஹா கேட்டுக்கொண்டார்.

### "கந்தசஷ்டிகவசம்" அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழாவைமுன்னிட்டு நேற்று நல்லூர் முருகன் சந்நிதியில் ''மில்க்வைற் சோப்'' ஸ்தாபனத்தார் அடியார்களுக்கு ''கந்தசஷ்டிகவசம்'' இலவசமாக வழங்கினர்.

### திருமண அழைப்பு

செல்வன்: **சே. சிவராஜா B. Sc**

(''வண்ணை சிவராஜா'' ஆசிரியர், மகா வித்தியாலயம், சம்மாந்துறை)

செல்வி: **வை. விமலநாயகி**

நிகழும் 29-8-65 ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 முதல்9-00மணிவரையில்வரும்சுபமுகூர்த்தவேளையில் மணமகளில்லத்தில் இனிது நடைபெறஇருக்கும் திருமணவைபவத்திற்குஉற்ருர் உறவினர், நண்பர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ரேம்.

| மணமகனின் பெற்ரோர்: | மணமகளின் பெற்ரோர்: |
|---|---|
| திரு. கா. வைத்தியலிங்கம் தம்பதிகள் | திரு. வெ. சேஞதிராஜா தம்பதிகள் |
| 219/4, நாவலர் வீதி, (கடையிற்சுவாமி வீதி) யாழ்ப்பாணம். | 35/1, பிறவுண் வீதி நீராவியடி, யாழ்ப்பாணம். |

வரவேற்பாளர்: **திரு. க. கீர்த்திசிங்கமும், பாரியாரும்**

(மனேஜர், காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் கொழும்பு) மணமகளின் சகோதரியும் கணவரும்

## வரி விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்குமுன் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப்பந்தலின் முன் இருந்து ஒரு பவுண் நகை கண்டெடுக்கப்பட்டு இருக்கிறது. கீழ்க் காணும் விலாசத்துக்கு சொந்தக்காரர் வந்து விபரத்தைச்சொல்லிப் பெற்றுக் கொள்ளலாம். கே. தங்கராசா, 50 28 கொட்டடி, பண்ணை ரோட், யாழ்ப்பாணம். 935

### WANTED

S. SC. qualified Girls to be trained as Pupil Nurses and Pupil Pharmacists Good knowledge of English essential. Apply in own English Handwriting before 10-9 65 President, Co-operative Hospital Moolai Chulipuram 93

### கல்வி

பெண்களுக்கு, 1965 டிசெம்பர் ஜி.சி.ஈ. (சாதாரணம்) பரீட்சைக்கான விஞ்ஞானம், ஆங்கிலம், பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின் வகுப்புகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்றன. உடனே நேரில் தொடர்பு கொள்க. கலா நிலையம், மாவடிக்கடையடி, வட்டுக்கோட்டை 936

### விற்பனைக்கு

''றெமிங்ரன்'' ஆங்கிலத் தட்டச்சுவிற்பனைக்கு உண்டு நேரில் வரவும். வர்த்தக கலாசாலை, 230, கே.கே.எஸ் வீதி யாழ்ப்மாணம். 937

### நாடகமன்ற நிர்வாகிகள்

திருக்கோணமலை, வியா.

அண்மையில் நிகழ்ந்த ரவீந்திரா நாடக மன்றத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: ஆசிரியர் எஸ்.எம். மைக்கல், திரு எஸ் சச்சிதானந்தம், திரு ஆர். சுப்பிரமணியம். தலைவர்: திரு. சித்திராஞ்சன், உபதலைவர்: திரு. பிரோஸ்சயிட், செயலாளர்: திரு ஆர். பூகுபதி, உபசெயலாளர்: திரு செ. சிவபாதசுந்தரம், தஞதிகாரி: திரு. தவசிலிங்கம், உபதஞதிகாரி: திரு. சிவராஜா.

### துறைமுக தொழிலாளர் கழகம்

திருக்கோணமலை. வியா.

இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகத்தின் புல்மோட்டைக்குழு அண்மையில் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது. பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு பொ. ஆனந்தமயில், உபதலைவர்: திரு வி. அருஞசலம், செயலாளர்: திரு த. விஜயசிங்கம், உபசெயலாளர்: திரு வே. சுவாமிநாதன், பொருளாளர்; ஜஞப். அ. அப்துல்ரகுமான், உபபொருளாளர்: திரு செ. பாலசிங்கம், 7 பேர் கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### விவாகரத்து வழக்கு

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவைச் சேர்ந்த குமுளமுனைக் கிராமசேவகர் இராசையா செல்லத்துரை தனது மனைவி செல்லத்துரை பகீர்ராணியிடமிருந்து விவாகரத்துக் கோரித் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு ஓ. எஸ். எம். செனிவரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிபதி வாதி-பிரதி வாதி இருவரையும் நோக்கி ''வாதி ஒரு கிராமசேவகர், பிரதிவாதி ஓர் ஆசிரியை ஆனபடியால் இருவரும் ஒற்றுமையாவது நல்லது. உங்கள் பிள்ளைகளுக்காக அவர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஆகவே அடுத்த மாதம் 7-ந் திகதி மேல்விசாரணை நடைபெறும். அதற்குள் ஒற்றுமையாவீர்களென நம்புகிறேன்'' என்ருர். வாதி சார்பில் புரக்டர் கே. ஐயாத்துரையின் அனுசரணையுடன் வழக்கறிஞர் சி. எம். தர்மலிங்கம் ஆஜராஞர். பிரதிவாதிதரப்பில் புரக்டர் பி. றெஜினேல்ட் ஆஜராஞர்.

### வடவியட்ஞம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

5-வது நாள்

இதற்கிடையே பூமியை வலம் வந்துகொண்டிருக்கும் இரு அமெரிக்க விண்வெளி வீரர்களும் இன்று ஐந்தாவது நாளை அமைதியாகக் களித்தனர். ,ஜெமினி-5ல்' பிரயாணம் செய்யும் கார்பன் கூப்பரும், சார்ள்ஸ் கொன்ராட்டும் நேற்றுச் சிறிது நேரம் நித்திரை செய்து ஓய்வெடுத்துக் கொண்டனர். இருவரின் உடல் நிலையும் திருப்திகரமாக இருப்பதாகவைத்திய அறிக்கையொன்று கூறுகின்றது.

விண்வெளிச்சாதனை

விண்வெளிக் கப்பலில் வலம்வரும் வீரர் கார்டன் கூப்பர் 116 மணி நேரம் யாத்திரை செய்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். 1963-ம்ஆண்டு ஜூன் மாதத்தில் ரஷ்ய வீரர்கள் மேற்கொண்ட சாதனையை இவர் முறியடித்துள்ளார். இதுவரை விண்வெளியில் அதிக தூரம் பிரயாணம் செய்திருப்பவர் கூப்பர் தான்.

### எம். பி. க்கு வரவேற்பு

பருத்தித்துறை, வியா.

அடுத்தமாத முதல்வாரத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்துக்கு கரவெட்டி பொது மக்கள் சார்பில் வரவேற்பொன்றளிக்கப்படவிருக்கின்றது.

அத்துளு மைதானத்தில் நடைபெறவிருக்கும் இவ்வரவேற்பு மைதானத்தில் நியமன எம். பி. க்களான திரு. எஸ். தொண்டமான், வி. அண்ணுமலை ஆகியோர் கலந்துகொள்வார்களெனத் தெரியவருகிறது.

முதல் தடவையாக இங்கு விஜயம்செய்யும் இந்த இரு நியமன எம். பி.க்களுக்கும் சிறந்த வரவேற்பளிக்கவும் விருந்தளிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

### ராஜவரோதய நினைவுநாள்

பருத்தித்துறை, வியா.

முன்ஞள் திருமலை எம். பி. திரு. என். ஆர். இராசவரோதயத்தின் ஞாபகார்த்தவிழாவை பருத்தித்துறையில் கொண்டாடுவதென வடமராட்சித் தமிழரசுக் கட்சிக்கிளை முடிவு செய்துள்ளது.

நாளை நடைபெறஇருக்கும் இவ்வைபவத்திற்கு திரு. க. ஜெயக்கொடி தலைமை தாங்குவார் எனவும் பிரதமபேச்சாளர்களாக வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை எம், பி. க்கள் கலந்துகொள்வார்கள் எனவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சி எம். பி. அரசாங்கக்கட்சியில் சேர்ந்தார்

## பட்ஜட்டை ஆதரித்து திஸமாரா தொகுதி அங்கத்தினர் பேச்சு

கொழும்பு, புதன்

இன்றிரவு திஸமாரா தொகுதி அங்கத்தினர் திரு. சாள்ஸ் எதிரிசூரியா பட்ஜட்டின்மீது தாம் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களிக்கப்போவதாய்க் கூறி அரசாங்கக் கட்சி ஆசனத்தில் சென்று அமர்ந்தார். இவர் சென்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பாக திஸமாரா தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பட்ஜட்டை ஆதரித்துப் பேசிய அவர் தமது பேச்சை முடித்ததும் எழுந்து சபையினூடாகச்சென்று, அரசாங்க ஆசனத்தில் அமர்ந்தபோது அரசாங்கக்கட்சி அங்கத்தினர்கள் பலத்த கரகோஷத்துடன் அவரை வரவேற்றனர்.

எதிர்க்கட்சி நாட்டுக்கு எவ்வித நன்மையும் செய்ய முடியாது இருப்பதை உணர்ந்தும், அரசாங்கத்தின் செயல் முறைகள் நாட்டின் அபிவிருத்தியை மனதில் கொண்டு நல்ல முறையில் நடைபெற்று வருவதாலும் தாம் அரசாங்கக் கட்சியில் சேர முடிவு செய்ததாயும் திரு. எதிரிசூரியா கூறினர்,

இந்த நல்ல பட்ஜட்டை ஆதரிக்காத எவரும் நாட்டின் எதிரிகள் என்று கருதப் படவேண்டும் என்றும் அரசாங்கம் வளலெவகங்கைத் திட்டத்தை தனது தொகுதியில் ஆரம்பித்திருப்பது தமக்கு மகிழ்ச்சியூட்டுவதாயும் அவர் தொடர்ந்து கூறினர்.

# 'சகலகட்சி அரசாங்கம் அமைக்கவேண்டும்'

—மூதூர் மஜீத்.

கொழும்பு, புதன்

சர்வகட்சி மகாநாடு ஒன்று கூட்டப்படவேண்டும் என்பதையும், அதன்மூலம் சிறுபான்மையினரின் பிரச்னைகளையும் வேறு முக்கிய பிரச்னைகளையும் தீர்த்துக் கொள்ளலாம் என்பது பற்றியும் இன்று நடைபெற்ற பட்ஜட் விவாதத்தின்போது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூதூர் இரண்டாவது எம். பி. திரு. மஜீத் வலியுறுத்தினர்.

இன்றுகாலை மீண்டும் பார்லிமெண்ட் கூடியபோது மூதூர் இரண்டாவது எம். பி, திரு. மஜீத் பட்ஜட் மீதான தமது உரையை நிகழ்த்தினர். திரு. மஜீத் சபையில் குறிப்பிட்டதாவது:-

ஏழு கட்சிகள் சேர்ந்து அமைத்த அரசாங்கத்தை தேசிய அரசாங்கம் என்று அழைப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. எதிர்க்கட்சியும் சேர்ந்துகொண்டு அரசாங்கம் அமைத்தால் மட்டுமே அதை தேசிய அரசாங்கம் என்று அழைக்கலாம். சிறுபான்மையினரின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வட்டமேசை மகாநாடு ஒன்று நடாத்தப்படவேண்டும். விவசாயிகளையும், தொழிலாளர்களையும் ஒன்றுபடுத்த கூட்டரசாங்கம் தேவையாகும். சுய, கட்சி நன்மைகளை அர்ப்பணித்து நாட்டின் அபிவிருத்திக்காக ஒன்றுசேர, தேசியத் தலைவர்கள் முன்வரவேண்டும்.

சிறுபான்மையினரின் உதவியின்றி எந்த அரசாங்கமும் பதவிக்கு வரமுடியாது. (திரு. ஆர். ஜி. சேனநாயக்கா ஒருதரம் குறுக்கிட்டுப் பேசுகையிலேயே இவ்விதம் திரு. மஜீத் குறிப்பிட்டார்.) நிதிமந்திரி திரு வன்னியநாயக்கா தனது பட்ஜட் மூலம் பொதுமக்களுக்கு சில நன்மைகளைச் செய்துள்ளார், எங்கள்நாடு பொருளாதார சுதந்திரம் பெறவேண்டுமானுல் இனப்பாகுபாடு நிலவாதிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

திரு, மஜீத் தனது உரையின் ஒரு கட்டத்தில்; வட்டமேசை மகாநாடு மூலம் பல முக்கிய பிரச்னைகளைத் தீர்க்கலாம்.

தொழில் அமைச்சர்:- வட்டமேசை மகாநாடு தேவையில்லை.

மஜீத்:- சகல கட்சி அரசாங்கம் ஒன்றை நாங்கள் அமைக்கவேண்டும்.

வவனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம் பட்ஜட் விவாதத்தின்போது பேசியதாவது:-

ஒன்பது வருடங்களாக நடைபெற்ற சுதந்திரக் கட்சி ஆட்சியின் பின்னர் தான் தேசிய அரசாங்கம் நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுள்ளதென்பதை பட்ஜட்டைக் கண்டித்துப்பேசியவர்கள் மறந்துவிட்டார்கள் போலும். இலங்கைப்பெண்கள் கைத்தறி உடைகளை அணியவேண்டும் எனக் கூறும் மிரிகம எம். பி. தனது கட்சித் தலைவி அதை அணிகிருரா என்பதையும் பார்த்துக் கொள்ளவேண்டும். 1956-ம் ஆண்டுக்கு முன்னர் எவரும் இனத்துவேஷத்தை கிளப்பியதில்லை. ஆனல் இப்பொழுது எதிர்க்கட்சியினர் தீவிர இனத்துவேஷப் பிரசாரம் செய்கிருர்கள். தமிழ் சமூகத்தினருக்கு அளவுக்கு மீறிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதுபோல கொக்கரிக்கிருர்கள். கடந்த காலத்தில் என்னமாதிரி நடந்து கொண்டாலும், ஐக்கிய தேசியக் கட்சி இப்பொழுது ஒரு உண்மையான தேசிய கட்சியாக மாறியுள்ளது. தம்பதேனியா, வலப்பனை எம். பி.க்களின் வாய்களிலிருந்துவரும் வகுப்புவாதப் பேச்சுக்களைப் பற்றி நாங்கள் அக்கறை கொள்ளப் போவதில்லை. ஆனல் பல காலங்களாக சமூக ஒற்றுமைபற்றி பேசிவந்த டாக்டர் என். எம். பெரேரா கூட வகுப்புவாதம் பேசுவதே எங்களுக்கு ஏமாற்றத்தைக்கொடுக்கிறது. வகுப்பு வேற்றுமையில்லாமல் வேலையில்லாதவர் எவராயினும் அவருக்கு வேலை வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

முன்னுள் கல்வி மந்திரி தமிழ் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வேண்டுமென்றே புறக்கணித்து அவற்றை தனது தொகுதியில் செலவு செய்தார். ஆனல் தேசிய அரசாங்கம் தேசிய அடிப்படையிலேயே மக்கள்

## உண்மையில் நல்லவர்!

கொழும்பு, புதன்

''தம்பதேனிய எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா அவர் தீவிர வகுப்புவாதி என எண்ணக்கூடியதாக பகிரங்கமாகவே வகுப்புவாத பேச்சுக்களை பேசுகிறவராஞலும், நெருங்கிப் பழகுவதற்கு மிகவும் நல்ல நண்பராவர். எவருடனும் வெகு அன்னியோன்யமாக பழகும் சிறந்த தன்மை அவரிடம் உண்டு'' இவ்வாறு பார்லிமெண்டில் நியமன எம். பி. திரு. எஸ் தொண்டமான் தெரிவித்தார்.

## போத்தல் வீச்சால் ஐவர் காயம்

### இருவர் கைது

யாழ்ப்பாணம், வியா.

நல்லூரில் நேற்று நடைபெற்ற சம்பவம் ஒன்றில் காயத்துக்குள்ளான ஐந்து பேர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் சம்பந்தமாக நவரத்தினம், கந்தையா என்னும் இருவரை பொலிசார் கைதுசெய்துள்ளனர். இரு சாராருக்கிடையே ஏற்பட்ட சச்சரவு போத்தல் வீசி காயம் விளைவிக்கும் அளவுக்கு வளர்ந்ததாகக் கூறப்படுகிறது.

## சன சமூக நிலைய சமய அறிவு போட்டி

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாக்களை முன்னிட்டு தட்டாதெரு கலாஜோதி சன சமூக நிலையத்தினர் நடத்திய சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு இன்று தீர்த்தோற்சவத்தன்று மாலை ஏழு மணிக்கு பத்தாம் வட்டார அங்கத்தவர் திரு. ரி. எஸ், துரைராசா பரிசுகள்வழங்குவார்,

இப்போட்டிகளில் பரிசு பெற்றவர்கள் வருமாறு:- கே, நித்தியானந்தம் தலையாளி; வி. கோமதி, வண்ணர்பண்ணை; இ. புனிதவதி, ஐயனர் கோவிலடி.

## சமரச ஸ்தாபனம்

கொழும்பு, புதன்

துறைமுக தொழிலாளர்களுக்கும், கப்பல் குமாஸ்தாக்களுக்குமிடையில் ஏற்படும் சச்சரவுகளை தீர்த்து வைக்க அரசாங்கம் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தியுள்ளது.


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வக்சோல் கார் டிபறென்ஷல் ஒன்றும், மற்றும் சன்ஷேட், பின் மட்காட் அழகு உறுப்புக்களும் விற்பனைக்குண்டு. மோகன்ஸ் மெயின் வீதி, சுன்னாகம். 932


நல்லை [illegible] கவனித்துவருகிறது.

வடபகுதி அசைஸ் விசாரணை

# 'எதிரி பொல்லால் அடித்ததும் கணவன் நிலத்தில் விழுந்தார்'

## நாவற்குளி கொலைவழக்கில் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''நான் வைத்தியர்களை குறை சொல்லவில்லை. ஆனல் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் நிர்வாக சீர்கேட்டைப் பற்றித் தான் குறை சொல்லுகிறேன்''.

நாவற்குழி கொலை வழக்கு நேற்றுக்காலை இரண்டாவது தினமாக அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சத்திர வைத்திய நிபுணர் டாக்டர் சேவியர் சாட்சியமளித்த சமயம், நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு தம்பையா மேற்கண்டவாறு கூறினர்,

இவ்வழக்கில் 64-ம்ஆண்டு டிசம்பர் 28-ந் திகதி நாவற்குழியில் நாகநாதர் பொன்னையா என்பவரை, விஞசி, பொன்னையா பொல்லால் அடித்துக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணையின் போது காலஞ்சென்றவரின் மனைவி சின்னம்மா கூறியதாவது:

பத்து வருடமாக எனக்கு கண்பார்வை சரியில்லை. அண்மையில் இருப்பவற்றை நல்லாய்ப் பார்க்க முடியாது. நடு மத்தியானத்தில் பார்வை நன்ருக தெரியாது, நான் மலாயாவைச் சேர்ந்தவள். எனக்கு மலாயாவிலோ, இலங்கையிலோ உறவினர் கிடையாது. மலாயாவில் கலியாணம் முடித்த பின் 15 வருடத்தால் இலங்கைக்கு வந்தோம். எங்களுக்கு பிள்ளைகள் கிடையாது. நான் பொலிசாருக்கு இதுபற்றிக் கூறவில்லை.

சின்னம்மாவின் கண் பார்வை நேற்று நீதிமன்றத்தில் பரிசோதனை செய்யப்பட்டது. கூண்டில் இருந்த எதிரியை கண்டுபிடிப்பதற்கு அவர் மிகவும் சிரமப்பட்டபின், எதிரி கூண்டிற்குள் இருக்கிருர் என நீதியரசர் தெரிவித்ததும் அவர் அருகில் சென்று இவர் தான் என்று கூறினர்.

சின்னம்மா கூண்டிலருகே சென்று எதிரியை சுட்டிக் காட்டியதும், எதிரி அவரைப் பார்த்து சிரிக்கவே நீதியரசர் நீதிமன்றம் சிரிப்பதற்கான இடமல்ல என எதிரியை எச்சரித்தார்.

# இலவச விதை நெல்: விரைவில் கிடைக்கலாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணக் குடா நாட்டி விவசாயிகள் விதை நெல்லைச் சேமித்து வைக்காததன் காரணமாக தற்பொழுது மிகவும் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆனல் சூருவளியினல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதை நெல்லு கொடுக்கப்பட வேண்டுமென்றும் அதற்கான உதவிகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்றும் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பு குழு சில மாதங்களுக்கு முன்னர் முடிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. விதைப்பு காலம் ஆரம்பமாவதற்கு இன்னும் சில வாரங்கள் தான் இருக்கின்றன வென்றும் தங்களுக்கு விதைநெல்லு வேண்டிய நேரத்தில் கிடைக்காவிட்டால் அதனல் ஒருவித பிரயோசனமும் கிட்டாதென்று விவசாயிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்.

விதை நெல்லு வாங்கி விவசாயிகளுக்கு வழங்குவதற்காக மூன்றரை லட்சம் ரூபா ஒதுக்கும்படி சில வாரங்களுக்கு முன்னர் யாழ். அரசாங்க சமூக சேவா மந்திரியைக் கடிதம் மூலம் கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இப்பண உதவி கிடைத்தால் கிளிநொச்சி, பூநகரி, துணுக்காய் முதலிய இடங்களிலுள்ள விவசாயிகள் நன்மைபெறுவார்களெனத் தெரியவருகிறது. இப்பணத்தைக்கொண்டு வாங்கப்படும் விதை நெல் முதலாம், இரண்டாம், மூன்ரும் முறைகளிலும் அறுவடை இல்லாத விவசாயிகளுக்கும் சூருவளியினல் பாதிக்கப்பட்டவர்களுக்குமே வழங்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

## சுடப்பட்டு மரணம்?

சாவகச்சேரி, வியா.

விடத்தல்பளை தோட்ட காவலாளியான சின்னத்தம்பி கந்தையா என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதே தோட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார். இது சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. மாஜிஸ்திரேட் திரு. பி. ஞெபர்ட் சில்வா மரண விசாரணை நடத்தினர். பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## சிரமதானம் மூலம் திருப்பணி

தெல்லிப்பழை, வெள்ளி

தெல்லிப்பழைதுர்காதேவி அம்மன்கோவிலின் திருப்பணி வேலைகளை தெல்லிப்பழை இளைஞர்கள் செய்து வருகிருர்கள். சுமார் அறுபதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் இப்பணியில் இறங்கியுள்ளனர். மிக விரைவில் இத்திருப்பணி வேலைகள் பூர்த்தியாகும்.


## திருமண அழைப்பு

பாலசுப்பிரமணியம்

தவநாயகி

திரு. கந்தப்பு கனகசபை பாலசுப்பிரமணியம் நீர்ப்பாசனப் பகுதி; சம்பளக் கந்தோர், கொழும்பு (பயிரிக்கூடல் காரைநகர்) அவர்கட்கும்திரு. க. சரவணமுத்து தலைமையாசிரியர் பொன்னலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை (முருகன் வாசம், கருங்காலி, காரைநகர்) அவர்களின் மகள் தவநாயகி அவர்கட்கும் 29-8-65 ஞாயிற்றுக்கிழமை காலை 700-8.15 மணிக்கும் இடையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் உற்ருர் உறவினர்களையும் நண்பர்களையும் இவ்வைபவத்தில் வந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

திருமதி K. K. இராசம்மாவும், க. சரவணமுத்து பாரியாரும்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org